13.02.2025

O.S.No.172/2017

வா.சா.1.திரு.சாமிசின்னையன் த.பெ.வீரணன்அம்பலம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு** குறுக்கு விசாரணை

தாவா சொத்து பெரிய சூரகுண்டு கிராமத்தில் உள்ளது. வாதிகள் 6, 7 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் நடைபாதை உரிமைகோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.329/1 மற்றும் 329/2 ஆகும். இதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் நிறைய இடம் இருக்கும். கிழமேல் ரோட்டில் இருந்து தென்வடலாக சுமார் 90 அடி நீளமும், சுமார் 6 அடி அகலமும் கொண்ட பாதைதான் தாவா சொத்து 6 அடி அகலத்தை தாண்டியும் நிறைய இடம் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண். 328/28 ஆகும். மேற்படி சொத்து எனது பெயரில் உள்ளது. சர்வே எண்.329/1 மற்றும் 329/2 ஆகியவை தற்சமயம் வரை வருவாய் ஆவணங்களில் கிராம நத்தமாக உள்ளது என்றால் சரிதான். எனது பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 6, 7 பிரதிவாதிகள் பட்டா கொடுக்க முயலுவதாக சொல்லியிருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சர்வே எண்ணில் சம்மந்தப்பட்ட சொத்திற்கு பட்டா கேட்டு 6, 7 பிரதிவாதிகளிடம் மனு ஏதும் கொடுக்கவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு பட்டா கொடுக்ககூடாது என்று நான் மனு தாக்கல் செய்துள்ளேன்.

2. சர்வே எண்.329/1 மற்றும் 329/2 ல் யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. சிறிய பகுதியை 8 ம் பிரதிவாதி பெருமாள் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அது 329/1 அல்லது 329/2 என தெரியவில்லை. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் பாதையாக இல்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக தாவா சொத்து பாதை என பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை காலத்தில் இருந்தே தாவா சொத்தை பாதையாக தான் பயன்படுத்தி வருகிறோம். தாவா சொத்திற்கு மேல்புறம் எனது வீடு உள்ளது. எனக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனைகளுக்கு தேவையில்லாமல் 6, 7 பிரதிவாதிகளையும் சேர்த்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் யாருக்கும் பட்டா கொடுக்கவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் கிராம நத்தமாக இருந்து வருகிறது என்றாலும் சரிதான். ஆகையால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.